தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 346/ந/2023
நாள் 19.12.2023

திரு. Y. சுல்தான்,
புதுக்கோட்டை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
அறந்தாங்கி நகராட்சி,
புதுக்கோட்டை மாவட்டம். – எதிர் மனுதாரர்

புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டிணம், சங்கம் தெரு, எண்.385 என்ற முகவரியில் வசிக்கும் திரு. Y. சுல்தான் என்பவரின் 19.07.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 24.07.2023 அன்று பெறப்பட்டு 346/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனு மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

<u>ஆணை</u>

புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டிணம், சங்கம் தெரு, எண்.385 என்ற முகவரியில் வசிக்கும் திரு. Y. சுல்தான் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம் மற்றும் நகரம் நகராட்சிக்குட்பட்ட அறந்தாங்கி வீரமாகாளியம்மன் திருக்கோவிலுக்கு சொந்தமான புல எண்.3/14 மனையிடத்தில் மனை வாடகைதாரரான அன்சாரி மற்றும் பரக்கத் பீவி ஆகியோர் மனை வாடகை செலுத்தி வருகின்றனர். மனை உரிமையாளரான அறந்தாங்கி அருள்மிகு வீரமாகாளியம்மன் திருக்கோயில் நிர்வாகத்தின் அனுமதி பெறாமலும், அறந்தாங்கி நகராட்சி நிர்வாகத்தின் வரைபடம் மற்றும் அனுமதி பெறாமலும் மூன்றடுக்கு கட்டடம் கட்டப்பட்டுள்ளதை இருதரப்பாரும் ஒப்புக்கொண்டுள்ளார்கள்.

மேற்காணும் புகார்மனு குறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினால் அதனை அறியும் பொருட்டு 16.05.2023–ம் தேதியில் தகவல் பெறும் உரிமைச் சட்டம் மூலம்

பதில் கோரியதற்கு, நகராட்சி நிர்வாக கடிதம் ந.க.எண்.2054/2023/அ1, 14.06.2023–ன்படி அளித்த பதிலில் கோவில் நிர்வாகத்திற்கு கடிதம் எழுதியிருப்பதாக கூறுகிறார்கள். அறந்தாங்கி கோவில் நிர்வாகத்திற்கு எழுதிய கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார்கள். இக்கடிதத்தின்படி நில குத்தகைதாரரின் அனுமதியின்றியும் கோவில் நிர்வாகத்தின் அனுமதியின்றியும், நகராட்சியிடம் வரைபடம் அளித்து அனுமதி பெறாமல் கட்டப்பட்டதையும் அறந்தாங்கி நகராட்சி குற்றமாக கருதாமல் கீழ்க்கண்ட சம்பந்தமில்லாத நபர்களுக்கு வரிவிதிப்பு செய்கிறார்கள்.

1) 108.008/01037. ST. சோலையப்பன்
2) 108/008/01047. அ. சிராஜுதீன்.
3) 108/008/01048. மு.விஜயா.
4) 108/008/01050. ந.சிவசற்குருநாதன்.
5) 108/008/01041. அ. லியாக்கத்அலி.
6) 108/008/01043. அ. அப்துல்லா.

மேற்படி அறந்தாங்கி நகராட்சி சொத்துவரி விதிப்பின்படி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகமானது, தகவல் பெறும் உரிமைச் சட்டம் மூலம் மாண்புமிகு தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் வழக்கு எண். CP1819/C/2021 நாள் 11.01.2022–ன்படி எனது மேல்முறையீட்டு மனு மீது அளித்த பதில் மனுவில், கீழ்க்கண்டவாறு பதில் அளித்துள்ளார்கள். அறந்தாங்கி கோட்டம், உதவி மின்பொறியாளர் / இ &கா/நகர்/அறந்தாங்கி பிரிவிற்கு உட்பட்ட கதவு இலக்கம் 47–ல் புல எண். 3/14–ல் அடங்கிய 0.10.5 செண்ட் இடத்தில் கட்டப்பட்டுள்ள இரண்டு மாடிகள் கொண்ட கட்டடத்தில் [ (1) 131–026–296, (2) 131–026–719, (3) 131–026–765, (4) 131–026–783 (5) 131–026–802, (6) 131–026–815 ] மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன என தெரிவித்துள்ளார். மேலும் 131–026–296 மற்றும் 131–026–719 ஆகிய மின் இணைப்புகள் 01.01.1980 ஆம் ஆண்டு பதியப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். இடித்து அப்புறப்படுத்தப்பட்ட கட்டடத்தில் முகம்மது யூசுப் என்ற பெயரில் எப்படி பழைய மின் இணைப்பு ஏற்படுத்தப்பட்டது என தெரியவில்லை.

எனவே அனுமதி இல்லாமல் கட்டிய கட்டடத்திற்கு வரிவிதிப்பை ரத்து செய்தும், மின் இணைப்புகளை துண்டித்தும், மின் இணைப்புகளுக்கு சொந்தமான கட்டடம் என சான்றளித்த அறந்தாங்கி தாலுகா கிராம நிர்வாக அலுவலர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்கவும் வேண்டுகிறேன்'' என தெரிவித்துள்ளார்.

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 14.11.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் அறந்தாங்கி நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.**

அறந்தாங்கி நகராட்சி ஆணையாளர் தனது 29.11.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:–

''அறந்தாங்கி நகராட்சி வார்டு எண்.11 பட்டுக்கோட்டை ரோடு 3–ஆம் தெருவில் பழைய புல எண்.3/14 கொண்ட அருள்மிகு வீரமாகாளியம்மன் கோவில் நிர்வாகத்திற்கு சொந்தமான

மனையிடத்தை குத்தகை அடிப்படையில் பெற்று திரு.அன்சாரி மற்றும் பரக்கத் பீவி ஆகியோர் கட்டடம் கட்டி பயன்படுத்தி வந்துள்ளனர்.

திரு.அன்சாரி மற்றும் பரக்கத்பீவி ஆகியோர் மேற்படி கட்டடத்தை 10.04.2014 ஆம் தேதியில் அறந்தாங்கி நோட்டரி பப்ளிக் அத்தாட்சியின் அடிப்படையில் கீழ்க்கண்டுள்ள ஆறு நபர்களுக்கு தனித்தனியாக விற்பனை சீட்டு மூலம் விற்பனை செய்துள்ளனர்.

| வ.எண் | பெயர் |
|---|---|
| 1 | திரு.S.T.சோலையப்பன் |
| 2 | திரு.அ.சிராஜ்தீன் |
| 3 | திருமதி.மு.விஜயா |
| 4 | திரு.ந.சிவசற்குருநாதன் |
| 5 | திரு.அ.லியாகத்அலி |
| 6 | திரு.அ.அப்துல்லா |

மேற்படி நபர்கள் கட்டடத்தை முழுவதுமாக இடித்துவிட்டு தனித்தனியாக கட்டடம் கட்டி அவரவர் அனுபவத்தில் பயன்பாட்டில் இருந்து வந்ததன் அடிப்படையில் மேற்படி கட்டடங்களுக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி) துறை அரசாணை (நிலை) எண்.161 நாள்.14.11.2000–இல் கட்டட அனுமதி பெறப்படாத கட்டடங்களுக்கு சொத்து வரிவிதிப்பு செய்யலாம் என வரப்பெற்றுள்ள தெளிவுரையின்படி பழைய வரிவிதிப்பு நீக்கம் செய்யப்பட்டு மேற்படி நபர்கள் பெயரில் புதிய வரிவிதிப்பு அடிமனைக்கு குந்தகம் இல்லாமல் மேற்கோப்பு வரியாக 2016–2017 இரண்டாம் அரையாண்டுமுதல் வரிவிதிக்கப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது.

மேற்படி கட்டடங்களுக்கு வரிவிதிப்பு செய்யப்பட்டு ஆறு ஆண்டுகள் கடந்த நிலையில் மனுதாரர் திரு.Y.சுல்தான் என்பவர் மேற்படி வரிவிதிப்புகளை நீக்கம் செய்யக்கோரியுள்ளார். மேற்படி விண்ணப்பத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு கட்டடம் அமைந்துள்ள இடத்தின் உரிமையாளரான அருள்மிகு வீரமாகாளியம்மன் கோவில் நிர்வாகத்திற்கு அறந்தாங்கி நகராட்சி அலுவலக கடிதம் ந.க.எண்.2019/2021/அ1 நாள் 13.10.2021 மற்றும் ந.க.எண்.2019/2021/அ1 நாள் 30.05.2023–ன்படி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. கோவில் நிர்வாகத்திடமிருந்து வரப்பெறும் பதிலறிக்கையின்படி உரிய மேல்நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

**(3) மனுதாரரும் மற்றும் அறந்தாங்கி நகராட்சி ஆணையரும் 30.11.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 16.11.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**(4) மனுதாரர் திரு. Y. சுல்தான் 30.11.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

"புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி நகராட்சி வார்டு எண் 11 பட்டுக்கோட்டை சாலை 3வது தெருவில் பழைய புல எண் 3/14ல் வீரமாகாளியம்மன் கோவில் நிர்வாகத்திற்கு சொந்தமான இடத்தில் குத்தகை அடிப்படையில் மனை வாடகை செலுத்தி வசித்து வந்த

திரு. அன்சாரி மற்றும் பரக்கத் பீவி ஆகிய இருவரும் மேற்கண்ட கோவில் நிர்வாகத்திற்கு சொந்தமான இடத்தை தனி நபர்களுக்கு சட்ட விரோதமாக விற்பனை செய்துள்ளனர். மேற்கண்ட தனி நபர்கள் நகராட்சியின் முன் அனுமதி பெறாமல் அவர்கள் வாங்கிய இடத்தில் கட்டடம் கட்டி மின் இணைப்பு பெற்றுள்ளனர். மேலும் இரண்டு கட்டடங்களுக்கும் நகராட்சியால் சொத்து வரி விதிக்கப்பட்டு நகராட்சியால் வரிவசூலிக்கப்பட்டு வருகிறது.

எனவே, சட்ட விரோதமாக கோவில் இடத்தை வாங்கி, கட்டடம் கட்டப்பட்டு அக்கட்டடத்திற்கு விதிக்கப்பட்ட சொத்து வரி விதிப்பை ரத்து செய்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது 19.7.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான அறந்தாங்கி நகராட்சி ஆணையர் சார்பாக வருவாய் ஆய்வாளராகப் பணியாற்றும் திரு. ரெ.ஜோதிபாண்டியன் மற்றும் திரு. கோ மகேந்திரன் ஆகியோர் 30.11.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்.

''மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி நகராட்சி, வார்டு எண் 11 பட்டுக்கோட்டை சாலை 3வது தெருவில் பழைய புல எண் 3/14 அருள்மிகு வீரமாகாளியம்மன் கோவில் நிர்வாகத்திற்கு சொந்தமனையிடத்தை திரு. அன்சாரி மற்றும் பரக்கத் பீவி ஆகியோர் குத்தகைக்கு பெற்று கட்டடம் கட்டி பயன்படுத்தி வந்த நிலையில், திரு. சோலையப்பன் மற்றும் 5 பேருக்கு தனித் தனியாக விற்றுவிட்ட நிலையில், மேற்கண்ட 6 பேரும் கோவில் இடத்தில் இருந்த பழைய கட்டடத்தை இடித்துவிட்டு புதிய கட்டடத்தை அனுமதியின்றி கட்டியுள்ளனர். மேற்கண்ட கட்டடம் கோவில் இடத்தில் கட்டப்பட்டுள்ள நிலையில் அனுமதியின்றி கட்டப்பட்ட அக்கட்டடங்களுக்கு நகராட்சியால் கட்டட அனுமதி தர இயலாது. கோவில் நிர்வாகம் தடையில்லா சான்று அளித்தால் மட்டுமே கோவில் இடத்தில் கட்டடம் கட்டுவதற்கு நகராட்சி அனுமதிக்க இயலும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். தற்போது நகராட்சியால் மேற்கண்ட கட்டடங்களுக்கு சொத்துவரி விதிப்பது குறித்து மேற்கண்ட கோவில் நிர்வாகத்திற்குத் தெரியும் எனவும், சொத்துவரி விதிப்பது குறித்து எவ்வித ஆட்சேபனையும் கோவில் நிர்வாகத்தால் தெரிவிக்கப்படவில்லை எனவும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் அறந்தாங்கி ஆணையரின் 29.11.2023 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்'' என தெரிவித்துள்ளனர்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், அறந்தாங்கி நகராட்சி ஆணையரின் அறிக்கை, வருவாய் ஆய்வாளராகப் பணியாற்றும் திரு. ரெ.ஜோதிபாண்டியன் மற்றும் திரு. கோ மகேந்திரன் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைபட்டிணம் என்ற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. Y. கல்தான் என்பவர் தனது 19.07.2023 நாளிட்ட மனுவில் அறந்தாங்கி நகராட்சிக்குட்பட்ட அருள்மிகு வீரகாளியம்மன் கோவிலுக்கு சொந்தமான புல எண்.3/14–ல், 0.10.5 சென்ட் பரப்பளவு கொண்ட மனையிடத்தில் குத்தகை ஒப்பந்ததாரர் திரு. அன்சாரி மற்றும் திருமதி. பரக்கத் பீவி ஆகியோரின் அனுமதியின்றியும், கோவில் நிர்வாகத்தின் மற்றும் அறந்தாங்கி நகராட்சியின் அனுமதியின்றியும் கட்டப்பட்ட 2 மாடிகள் கொண்ட கட்டடங்களுக்கு தனிநபர்களின் பெயரில் விதிமீறி சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளதை இரத்து செய்யக்கோரியுள்ளார்.

மனுதாரர் புகாராக தெரிவிக்கும் அறந்தாங்கி நகராட்சிக்குட்பட்ட புல எண்.3/14–ல் உள்ள அருள்மிகு வீரமகாளியம்மன் கோவில் நிர்வாகத்திற்கு சொந்தமான மனை இடத்தினை திரு.அன்சாரி மற்றும் பரக்கத்பீவி ஆகியோர் குத்தகை எடுத்து அவ்விடத்தில் கட்டடம் கட்டி, பின்னர் திரு.S.T.சோலையப்பன் மற்றும் 5 நபர்களுக்கு விற்பனை செய்யப்பட்டு அந்த 6 நபர்களும் பழைய கட்டடத்தை இடித்து புதிய கட்டடம் கட்டியுள்ள நிலையில், நகராட்சி நிர்வாக (மற்றும்) குடிநீர் வழங்கல் துறையால் வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண். 161, நாள் 14.11.2000–ன்படி அனுமதியற்ற கட்டடங்களுக்கு சொத்து வரிவிதிப்பு செய்யலாம் என ஆணையிட்டுள்ளதன் அடிப்படையில் அறந்தாங்கி நகராட்சி பழைய சொத்துவரியை நீக்கம் செய்து புதிய கட்டடங்களுக்கு, அடிமனைக்கு குந்தகம் விளைவிக்காமல் மேற்காணும் 6 நபர்களின் பெயரில் புதிய சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்காணும் சொத்துவரியினை தனிநபர்களின் பெயரில் நீக்கம் செய்யக் கோரி முன்பே அறந்தாங்கி நகராட்சியில் வரப்பெற்ற மனுதாரரின் புகார்மனு குறித்து நகராட்சி அலுவலகக் கடித ந.க.எண்.2019/2021/அ1 நாள் 13.10.2021 மற்றும் ந.க.எண்.2019/2021/அ1, 30.05.2023 நாளிட்ட கடிதங்களின் மூலம் கட்டடம் கட்டப்பட்டுள்ள இடத்தின் உரிமையாளரான அருள்மிகு வீரமாகாளியம்மன் கோவில் நிர்வாகத்திற்கு நகராட்சினர் தெரிவித்துள்ளதையும், கோவில் நிர்வாகத்திடமிருந்து பதில் அறிக்கை பெற்ற பின்னரே உரிய மேல்நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் மற்றும் 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ளபடி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் தொடர்பான புகார்கள் மட்டுமே இம்முறைமன்ற நடுவத்தால் விசாரணை செய்து நடவடிக்கை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் மனுதாரரால் தெரிவிக்கப்படும் புகார் மனு தொடர்பான பொருளானது இந்து சமய மற்றும் அறநிலையத் துறைக்கு சம்பந்தமானது என்பதால், அறந்தாங்கி நகராட்சி ஆணையாளர் சமர்ப்பித்துள்ள அறிக்கையினை ஏற்று, இப்புகார் மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மனுதாரர் தனது புகார் குறித்து உரிய அமைப்பினை நாடி பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்.

2023 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. Y. சுல்தான்,
எண்.385, சங்கம் தெரு,
கோட்டைப்பட்டிணம் – 614 619.
புதுக்கோட்டை மாவட்டம்.

2) ஆணையாளர்,
அறந்தாங்கி நகராட்சி,
புதுக்கோட்டை மாவட்டம் – 609 001.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உரையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்
20/12/23